செ.வெ.எண்: 28 நாள்: 15.09.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பாண்டில் 171 ஊராட்சிகள் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லா ஊராட்சிகளாக மாற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் முழுசுகாதார தமிழகம், முன்னோடி தமிழகம், சமூக சுகாதார அணுகுமுறைகள் பற்றி பயிற்றுநர்கள் மற்றும் ஊக்குநர்களுக்கான பயிற்சி முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (15.9.2016) நடைபெற்றது.

இந்த பயிற்சி முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முழுசுகாதார இயக்க கையேட்டினை வெளியிட்டு பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி கிராமப்புறங்களில் சுகாதாரத்தை பேணும் வகையில் அனைத்து பொதுமக்களும் கழிப்பறையை உபயோகப்படுத்தும் வகையில் மத்திய அரசு மற்றும் தமிழகஅரசு இணைந்து தனிநபர் இல்லக்கழிவறை கட்டும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்திலுள்ள பொதுமக்களுக்கு தனிநபர் இல்லக்கழிவறையை பயன்படுத்தும் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்த முதன்மை பயிற்றுநர்கள் மற்றும் ஊக்குநர்களுக்கான பயிற்சி முகாம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இம்முகாமில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தும் 3 நபர்கள் கலந்து கொண்டுள்ளனர். இவர்களுக்கு வெளியில் மலம், ஜலம் கழித்தலை தடுத்து சுகாதாரத்தை பேணும் வகையில் பொதுமக்களுக்கு சமூக சுகாதார அணுகுமுறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு பயிற்சிகள் இன்று (15-9-2016) முதல் 17.9.2016 வரை 3 நாட்களுக்கு அளிக்கப்படவுள்ளது. இம்முகாமில் பயிற்றுநர்களுக்கு பயிற்சியின் விதிமுறைகள் அமைத்தல் மற்றும் குழு பிரித்தல், முன்மதிப்பீடு, சமுதாய அணுகுமுறை மற்றும் சுகாதாரத்தின் வரலாறு, பயிற்சியாளர் மற்றும் ஊக்குநர்களுக்கான அடிப்படை தகுதிகள், தூண்டுதல் முறை செயல் விளக்கம், சுகாதார களப்பணி, திறந்தவெளி மலம், திறந்தவெளி அற்ற நிலை, ஏன் திறந்த வெளி மலம் கழித்தல், ஏன் திறந்தவெளி அற்ற நிலை, திறந்தவெளி மலம் வரைபடம், தூண்டுதலின் வகைகள் (இழுத்தல் மற்றும் தள்ளுதல்), திறந்த வெளி மலத்தை கண்டறிய அறிகுறிகள், கழிப்பறை தொழில்நுட்ப அறிவு, நோய்கள், மலத்தை கணக்கிடுதல், செய்யக்கூடியவை மற்றும் கூடாதவை, கற்றலின் தொகுப்பு, சுகாதாரத்தின் செயல்திட்டம் உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது.

மேலும் நமது மாவட்டத்தில் 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 497 கிராம ஊராட்சிகளில் 2015-16ம் ஆண்டில் 29 கிராம ஊராட்சிகளும், 15.08.2016ல் 48 கிராம ஊராட்சிகளும் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் நடப்பாண்டில் 171 கிராம ஊராட்சிகள் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சியாக மாற்ற தேர்வு செய்யப்பட்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பயிற்சியில் கலந்து கொண்டுள்ள பயிற்றுநர்கள், இப்பயிற்சி மூலம் மக்களிடம் நேர்முக தகவல் பரிமாற்றம் மூலம் மனமாற்றத்தை கொண்டு வந்து திறந்த வெளியில் மலம் கழித்தலை தடுத்து கழிப்பறையை பயன்படுத்த செய்வதுடன் நடப்பாண்டில் தேர்வு செய்யப்பட்டுள்ள 171 கிராம ஊராட்சிகளையும் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சியாக மாற்ற ஒருங்கிணைந்து சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இம்முகாமில் திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.எம்.சந்தோஷ்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.து.பாஸ்கர், இளநிலை ஆலோசகர் (திறன் வளர்ப்பு), சென்னை திரு.பெ.கண்ணன், எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.ஆர்.ராஜ்குமார், உதவி திட்ட அலுவலர் (வேலைவாய்ப்பு) திரு.கே.பன்னீர்செல்வம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**